https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

21ST JULY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 89






# ஜனாதிபதி தேர்தல் செப்.28இல்?

ஜனாதிபதி தேர்தல் செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், வேட்பு மனுதாக்கல் ஒகஸ்ட் மாதம் 15 மற்றும் 20 திகதிகளில் இடம்பெறும் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

தேர்தலை நடத்தும் அதிகாரம் இந்த மாதம் 17ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்தது. அதன் அடிப்படையில் இன்னும் ஒரிரு நாட்களில் தேர்தலுக்கான திகதியை ஆணைக்குழு அறிவிக்கவுள்ளது.

## அரச அச்சகத்துக்கு அதிக பாதுகாப்பு

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை விடவும் இந்தத் தேர்தலையொட்டி அரச அச்சகத்துக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.இரவு-பகல் காவல் பணிக்காக 65 பொலிஸார் நிறுத்தப்படவுள்ளனர்.

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதும் வாக்குசீட்டுக்களை அச்சடிக்கும் பணி ஆரம்பமாகும் என்று அரச அச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அச்சுப் பணிக்காக 80 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தலா?

இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்குத் திட்டமிட்டுள்ளவர்களுக்கு அச்சுறுத்தல் எதுவும் இருக்கிறதா என்று அறிவதற்காக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் பொலிஸாரிடம் அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் வேட்பாளர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பிமீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதைத் தொடர்ந்து சஜித் பிரேமதாசாவுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்றும் ஐக்கிய மக்கள் சக்தி கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரணில் - விஜயதாச லடாய்





22ஆம் திருத்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் பிரசுரித்தமை காரணமாக ஜனாதிபதிக்கும் நீதி அமைச்சர் விஜயதாச

02 ➤

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன





ராதா கிருஷ்ணா | சீதா ராம்

ஸ்ரீ பாலாஜி | நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

புதுசுடர்
www.puthusudar.lk
2024 JULY 21 - SUNDAY

# தயாராகுங்கள்

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளது. தேர்தலுக்கான திகதி இன்னும் ஒரு சில தினங்களில் அறிவிப்படப்படவுள்ளது. எப்படி இருப்பினும்,தேர்தல் நடத்துவதென்பது .உறுதியாகிவிட்டது.

தேர்தலை ஒத்திப்போடுவதற்காக ஜனாதிபதி நகர்த்திய அத்தனை காய்களும் வீண் என்றே சொல்ல வேண்டும்.ஏனைய தேர்தல்களை விடவும் இந்தத் தேர்தல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.மக்களால் அதிகம் எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கு காரணம் பொருளாதார நிலைமைதான்.மிகுந்த எதிர்பார்ப்புடன் 2019இல் கோத்தாபாய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கினார்கள் மக்கள். எல்லாமே வெகு சீக்கிரத்திலேயே பிழைத்துப் போயின.நாட்டு மக்களை முற்றாக ஏமாற்றிவிட்டு அனைவரையும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளினார்.

தாம் அவசரப்பட்டு –இனவாத பிரசாரத்துக்குள் சிக்கி திறமையற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கிவிட்டோம் என்று எண்ணி மக்கள் வருந்தினர்.இதனால் பொங்கி எழுந்து அவரை விரட்டியடித்தனர்.

இரண்டு வருடங்களில் அவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.அவரது மிகுதி காலத்துக்கு ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் மொட்டு கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதியாக்கப்பட்டார்.

அப்போது மொட்டு கட்சிக்கு நாட்டு மக்களால் ஏற்பட்ட அச்சுத்தலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கிலேயே ரணிலை அவர்கள் ஜனாதிபதியாக நியமித்தனர்.

அந்தப் பணியை ரணில் கச்சிதமாகச் செய்தார்.மொட்டு கட்சியினதும் ராஜபக்ச குடும்பத்தினதும் பாதுகாப்பை நூறு வீதம் உறுதிப்படுத்தினார்.

மக்களை சாந்தப்படுத்துவதற்காக அப்போது இருந்த பெரிய பிரச்சினையான எரிபொருள் மற்றும் மின்சார பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

இதனால் மக்களின் கோபம் சற்றுத் தனியத்தொடங்கியது.ஆனால்,மறுபுறம் மக்கள் இறுகத் தொடங்கினர்.ரணில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறுவதற்காக அந்த நிதியம் விதித்த கடுமையான நிபந்தனைகளை அப்படியே ஏற்று அமுல்படுத்தத் தொடங்கினார்.

இதனால் பல வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.இதனால் பொருட்களின் விலைகள் தாறுமாறாக ஏறி மின் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது. மின் கட்டண அதிகரிப்பால் கட்டணத்தை செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடினர்.இப்போதும் திண்டாடுகிறார்கள்.லட்சக்கணக்கான இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

மறுபுறம்,ஊதிய வரி அறிமுகத்தால் வைத்தியர்கள் உள்ளிட்ட தொழில் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

இன்னும் மக்கள் அதே கஷ்ட நிலையில்தான் உள்ளனர்.பொருட்களின் விலை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.குறையவே இல்லை.

எரிபொருளையும் மின்சாரத்தையும் பெற்றுக்கொடுத்துவிட்டு பொருளாதார பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்று சொல்கிறது அரசு.

இப்படியானதொரு நிலையில்தான் இப்போது ஜனாதிபதி தேர்தல் வந்திருக்கிறது.இந்தத் தேர்தலில் இனவாதம் எடுபடாது.நாட்டைக் கட்டியெழுப்பும்–மக்களின் வாழ்வை முன்னேற்றும் சரியான பொருளாதார கொள்கையே எடுபடும்.

உண்மையில், இதை அடிப்படையாக வைத்தே யாருக்கு வாக்களிப்பது என்று மக்கள் முடிவெடுக்க வேண்டும்.அதுவே சரியான முடிவாக அமையும்.

# ஜனாதிபதி ஒதுக்கிய நிதி மக்கள் சேவைக்கே தவிர எம்.பிக்களின் சொந்த பாவனைக்கல்ல

## ஹரீஸ் எம்.பி தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)



இந்த நாட்டில் ஒரு எதிர்க்கட்சியில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் நான். பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய அவசியத்தையும், வடகிழக்கு மக்களுக்கு தேவையான அபிவிருத்தி விடயங்களையும் அவருக்கு விளக்கினேன். அவற்றை பற்றி உணர்ந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மக்களுக்கு சேவை செய்ய எனக்கு நிதியினை வழங்கியிருக்கிறார். அதை கொண்டு பாடசாலைகள், பள்ளிவாசல்கள், பொது நிறுவனங்கள், பிரதேச உட்கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறேன். இந்த நிதி எனது சொந்த தேவைகளுக்கு தரப்பட்டதல்ல. எனது பிரதேச அபிவிருத்தி பணிகளுக்கு தரப்பட்டவை. இதனைக் கண்டு பல அரசியல்வாதிகள் பொறாமை கொள்கிறார்கள். எனக்கும் ஜனாதிபதிக்கும் உள்ள தொடர்பு என்ன என்று அரசியல்வாதிகள் சிலர் கேள்வி எழுப்ப தொடங்கி விட்டார்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனையில் இடம்பெற்ற பாடசாலை நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர், நான் படிக்கும் காலங்களில் பல்கலைக்கழகம் என்பதும் பட்டங்கள் பெறுவது என்பதும் பல மாணவர்களுக்கு எட்டாக்கனியாக இருந்தது. ஒரு காலத்தில் உயர்தர பரீட்சையில் போதியளவு சித்தியடையாது விட்டால் அல்லது பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாவிட்டால் கூலி தொழிலுக்கு செல்கின்ற காலம் இருந்தது.

ஆனால் இப்போது இருக்கின்ற அரசாங்கத்தினதும், எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களினதும் கல்விக் கொள்கையானது உயர்தரத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாவிட்டாலும் அந்த மாணவன் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று மேற்படிப்பை பூர்த்தி செய்யக்கூடிய வழிவகைகள் அத்தனையும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தனது பட்டப்படிப்பை மேற்கொள்ள போதியளவு பணம் இல்லாதவர்களும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இன்று ரணில் விக்ரமசிங்க வங்கிகளூடாக உருவாக்கி உள்ளார்.

இளைஞர், யுவதிகளுக்கான வாய்ப்புகள் இலங்கையில் பரந்து கிடக்கின்றது. ஒவ்வொருவரும் தமக்கு பிடித்த துறைகளில் மேற்படிப்புகளை கற்றுக் கொள்ளலாம். எல்லாத்துறைகளிலும் இப்போது நிறைய சம்பாதிக்கும் வாய்ப்புக்கள் உள்ளது. அண்மையில் அம்பானி வீட்டில் பாட்டுப்பாடியவரே சில நிமிடங்களுக்கு பல கோடி ரூபாய்களை சம்பளமாக பெற்றுள்ளார். தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் நானும் உயர்தரத்தில் கலைத்துறையில் படித்தவன். பின்னர் பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் கற்று இப்போது நான் சட்டத்தரணியாக இருக்கிறேன்.

துரதிஷ்டவசமாக பெருந்தலைவர் எம். எச்.எம்.அஷ்ரப் அவர்கள் மூலமாக நான் அரசியலுக்குள் நுழைந்தேன். எனவே நீங்களும் உங்களுக்கு பிடித்த துறையை படித்து அதில் ஒரு நல்ல இடத்தை பெற்றுக் கொள்ளுங்கள். நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க அவர்கள் ஒரு கல்விமான் என்பதனால் அவருக்கு கல்வியின் அவசியம் தெரிகிறது. அதனால் கல்வியை மேம்படுத்த இவ்வாறான வேலைத்திட்டங்களை செய்கிறார்.

நீங்களும் உங்களுக்கு விருப்பமான துறையை தெரிவுசெய்து அதில் முழு கவனத்தையும் செலுத்தினால் அது அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும். உலகில் சிறந்த பாடகர்கள் இருக்கிறார்கள். சிறந்த கிரிக்கெட் வீரர்கள் இருக்கிறார்கள். இதுபோல பல துறைகளிலும் பிரகாசிக்கும் பலரும் இருக்கிறார்கள். அவர்கள் ஆசைப்பட்ட துறையில் சென்றதால் அவர்கள் நல்ல இடத்தை அடைந்திருக்கிறார்கள். வாழ்க்கையில் மிக முக்கியமானது நம்பிக்கை. எனவே முயற்சி என்பதை நீங்கள் எப்போதும் வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

## ஒரு வாக்காளருக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்சவுக்கும் இடையில் பனிப்போர் தோன்றியுள்ளது என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

இந்த சட்டமூலத்தை தேர்தல் முடியும்வரை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டாம் என்று அமைச்சர் அமைச்சின் செயலாளரிடம் கூறி இருந்தார்.

ஆனால்,ஜனாதிபதியோ அமைச்சரின் உத்தரவை உதாசீனப்படுத்தி வர்த்தமானியில் பிரசுரித்துவிட்டார்.

இதனால், இருவருக்குமிடையில் இப்போது பனிப்போர் நிகழ்ந்து வருகிறது என்று கூறப்பட்டுகிறது.





# அரசின் கையாலாகாத் தனம்

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி இன்னும் ஒரு சில நாட்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்படவுள்ளது. அதற்கான அதிகாரம் இந்த மாதம் 17ஆம் திகதி ஆணைக்குழுவுக்குக் கிடைத்துவிட்டது.

இனி இந்தத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு வாய்ப்பில்லை.இதற்கு முன் இதை ஒத்திப்போடுவதற்குப் பல முயற்சிகளை எடுத்தது.பல திட்டங்களை வகுத்தது. அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதியின் ஆயுட்காலம் ஐந்து வருடங்கள்தான் என்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து தேர்தலை ஒத்திப்போடும் அரசின் அத்தனை முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

உண்மையில், தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு பல முயற்சிகளை எடுத்து வந்தது. ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபண்டா இது தொடர்பில் முதல் குண்டைத் தூக்கிப்போட்டார். இரண்டு வருடங்களுக்கு தேர்தலை ஒத்திப்போடுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அவர் யோசனை ஒன்றை முன்வைத்தார்.

அந்த யோசனை எடுபடவில்லை. அனைவரும் எதிர்க்கத் தொடங்கினர். மொட்டு கட்சிகூட இதற்கு ஆதரவில்லை.

இதனால் அது அப்படியே அடங்கிப்போனது.இருந்தும்,ஒத்திப்போடல் முயற்சியை ஜனாதிபதி கைவிடவில்லை. இன்னொரு முயற்சியை ரணில் மேற்கொண்டார். அதுதான் சர்வஜன வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றத்தின் ஊடாக ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நீடித்தல்.

6 வருடங்களாக இருந்த ஜனாதிபதியின் ஆயுட்காலம் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக 5 வருடங்களாக குறைக்கப்பட்டது. குறைக்கப்பட்ட அந்த ஒரு வருடத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்று சில சட்ட வல்லுநர்கள் ரணிலுக்கு ஆலோசனை வழங்க,அந்த ஒரு வருடத்தை இணைத்துக்கொண்டு ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நீடித்து தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திப்போடும் வேலையில் ஜனாதிபதி இறங்கினார்.

ஆனால், இந்த முயற்சிக்கும் மொட்டு கட்சி எதிர்ப்புத் தெரிவித்தது. தேர்தலை ஒத்திப்போடப்படக் கூடாது. உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே மொட்டு கட்சியின் நிலைப்பாடு என்று பொது செயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

மொட்டு கட்சியின் ஆதரவு இல்லாமல் ரணிலால் நாடாளுமன்றில் எந்தவொரு பிரேரணையையும் சட்ட மூலத்தையும் நிறைவேற்ற முடியாது.

இருந்தும், ரணிலுக்கு ஆதரவாக வர்த்தகர் ஒருவர் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்து ஜனாதிபதியின் ஆயுட்காலம் 6 வருடங்கள் என உத்தரவிட வேண்டும் என்று கூறினார்.

19ஆவது அரசமைப்பின்படி, ஜனாதிபதியின் ஆயுட்காலம் 5 வருடங்களே என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனால் இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவது உறுதியாகிவிட்டது.

இப்போது அரசு தேர்தலை எதிர்கொண்டே ஆகவேண்டும் இதனால், எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பொய்யான கூற்றுக்களை முன்வைத்து அதனூடாக தேர்தலை வெற்றிகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதில் ஒன்றுதான் இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாசா போட்டியிடமாட்டார். ஓடி ஒளிந்துகொள்வார் என்ற பிரசாரம். ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபண்டா இதைக் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பக்கம் வெற்றி காற்று அடிக்கும்போது சஜித் ஏன் ஓடி ஒளியவேண்டும் என்பதுதான் இப்போது அனைவரும் எழுப்பும் கேள்வி.

வெற்றி வாய்ப்புகள் அதிகம் உள்ள கட்சிகளாக சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியும் ஜேவிபியும் உள்ளன.உண்மையான போட்டி சஜித்துக்கும் அனுர திஸாநாயக்கவுக்கு மிடையிலேயே நிலவுகிறது.

அப்படி இருக்கும்போது சஜித் ஏன் ஓடிஒளிய வேண்டும்.

தேர்தலை வெல்வதற்காக அரசு இன்னும் என்னென்னவெல்லாம் செய்யபோகிறதோ!



# கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு தொடர்பான ஒரு சவால் அறிவிப்பு

(காலித் ரிஸ்வான்)

சவுதி அரேபியாவின் பொருளாதார மற்றும் திட்டமிடல் அமைச்சு மற்றும் ஆற்றல்கள் அமைச்சுஇ ஞிடுமை உடன் இணைந்துஇ கார்பன் பொருளாதாரத்தை துரிதப்படுத்தும் புதுமையான தீர்வுகளைக் கண்டறிவதை நோக்காக கொண்டுஇ கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு தொடர்பான ஒரு சவாலை கடந்த வாரம் உத்தியோக பூர்வமாக அறிவித்தது. கடந்த ஜ"லை 10 ஆம் தேதி நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கான உயர்மட்ட அரசியல் மன்றத்தின் (ரடுீகு) போது இச்சவால் அறிவிக்கப்பட்டது.

கார்பன் பிடிப்பு தொழில்நுட்பம்இ நாவல் கார்பன் பயன்பாட்டு முறை மற்றும் தொழில்துறை ஒருங்கிணைப்பு போன்ற நிலையான மாற்றத்தின் மூலம் கார்பன் உமிழ்வைக் குறைக்கும் புதுமையான தீர்வுகளை கொண்ட திட்டங்கள் அல்லது யோசனைகளை சமர்ப்பிப்பதையே இந்த சவாலானது தொழில் துறையினரிடம் வேண்டி நிற்கிறது.

இந்த திட்டம் கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாட்டை (CCU) வலியுறுத்துவதோடுஇ ஒரு நிலையான மற்றும் பொருளாதார ரீதியாக வளமான எதிர்காலத்தை உருவாக்குவதில் இவ்வாறான புத்தாக்க சிந்தனைகள் வகிக்கும் முக்கிய பங்கை வலியுறுத்துகிறது. அத்துடன் சவூதி அரேபியாவின் முக்கிய இலக்குகளில் ஒன்றான 2060 ஆகும் போது நிகர-பூச்சியத்தை அடைதல் என்பதற்கான கார்பன் அகற்றலின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

நிகர பூஜ்யம் (net-zero) என்பது காபன் உமிழ்வை குறைத்தல் மற்றும் கார்பன் டை ஆக்சைட் உறிஞ்சுதல் நுட்பங்களை செயல்படுத்துவதன் மூலம் மனித நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட பச்சை இல்ல வாயுக்களின் அளவை முற்றிலுமாக அகற்றுவதை குறிக்கிறது.

சவூதி அரேபியாவின் எரிசக்தி அமைச்சர் இளவரசர் அப்துல் அசீஸ் பின் சல்மான் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை போன்றன உலகளாவிய பிரச்சினைகளாகும், பிராந்திய ரீதியாகவோ அல்லது சிறிய புவியியல் எல்லைகளுக்குள்ளோ இது பற்றி கலந்துரையாட முடியாதுஇ மாறாக உலகளாவிய ரீதியாக அணுக வேண்டிய பிரச்சனையாகும்." எனக் கூறினார்.

"சவூதி அரேபியா தனது லட்சிய இலக்கான நிகர பூச்சியத்தை 2060 க்குள் அடைவதற்கான தனது முயற்சிகளை வட்ட கார்பன் பொருளாதார கட்டமைப்பின் மூலம் மேம்படுத்த முயல்கிறது.

இக்கட்டமைப்பானது, கார்பன் உமிழ்வின் தாக்கத்தை குறைப்பது மட்டுமல்லாமல், கார்பனை ஒரு மாசு பொருளாக்காமல் பொருளாதார பெறுமதியுடன் கூடிய ஒரு வளமாக மாற்றுகிறது" எனவும் அப்துல் அஸீஸ் பின் சல்மான் அவர்கள் தெறிவித்தார்.

மேலும், சவூதியின் மேற்குறிப்பிட்ட இலக்கை 2060 இல் அடையவும்இ உலகளவில் கார்பனின் பொருளாதார பயன்பாட்டை முழுமையாகப் பெறவும்இ முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து இந்த உலகளாவிய கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாட்டு சவாலை சவூதி தொடங்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய சவாலை ஏற்றுக்கொள்வதன் மூலம்இ காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முயற்சிகளில் செல்வாக்குமிக்க மாற்றங்களை சவூதி முன்னெடுத்து வருவதாகவும்இ கூட்டு முயற்சிகள் மற்றும் முன்னோடியான கண்டுபிடிப்புகள் மூலம் நாளைய பிரச்சனைகளை இன்றைய தீர்வுகளாக மாற்றுவதற்கு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இந்த சவால் ஒரு வாய்ப்பாக அமைகிறது என்பதை அவர் வலியுறுத்தினார்.

சவூதி அரேபியாவின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் அலிப்ராஹிம் கூறியதாவது: சவூதி அரசு ஒரு நியாயமானஇ ஒழுங்கான மற்றும் நடைமுறையான ஆற்றல் மாற்றத்தில் ஆர்வமாக உள்ளது

அத்தோடு கார்பன் பொருளாதார கட்டமைப்பின் முன்னேற்றத்தை நோக்கி செயல்படுகிறது. கார்பன் பொருளாதாரத்தில் உள்ள புத்தாக்கங்கள் தொடர்பான இந்த சவாலின் மூலம்இ குறிப்பிட்ட புத்தாக்க முயற்சிகளை மேலும் முன்னேற்றமடையச் செய்ய துணையாக அமையும் புதிய தீர்வுகளை அவர்கள் எதிர் பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

அனைத்து கண்டுபிடிப்பாளர்கள், சிந்தனையாளர்கள், மற்றும் நிறுவனங்களையும் புதிய ஆக்கபூர்வமான தீர்வுகளைக் கொண்டு வருமாறு தாங்கள் ஊக்குவிப்பதாகவும் கூறினார்.

சில சமயம் தற்காலத்தை பொருத்தமட்டில் அவர்களது புத்தாக்க யோசனைகளை நடைமுறைப்படுத்த நீண்டகாலம் எடுப்பதாக தோன்றினாலும், எதிர்காலத்தில் பொருந்தக்கூடியதாகவும் செயல்படக்கூடியதாகவும் இருக்கும் யோசனைகளையும் எதிர்பார்ப்பதாகவும் அலிப்ராஹிம் அவர்கள் கூறினார்.

சமர்ப்பிக்கக் கூடிய புத்தாக்க திட்டங்கள், எந்தளவு பொருளாதார நலன்களை ஈட்டித்தரக் கூடியன, எந்தளவு எதிர்காலத்தில் வளர்ச்சியடையக் கூடியன, பண ரீதியான முதலீடுகளை மற்றும் நிதியை ஈட்டித் தரக் கூடிய வள்ளமை மற்றும் சந்தையில் அந்தந்த திட்டங்களின் பெருமானம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படும்.

இந்த சவாலில் வெற்றி பெறுபவர்கள் சிறந்த கண்டுபிடிப்பாளர்களாகக் கருதப்பட்டு, நிறுவனர்கள், CEOக்கள் மற்றும் இயக்குநர்கள் போன்ற தலைவர்களுக்கான சிறப்புத் திட்டமான UpLink Innovation Ecosystem இல் இணைத்துக் கொள்ளப்படுவர்.

வெற்றியாளர்களுக்கு ஊர்கு 300,000 வரையான பரிசுத் தொகை வழங்கப்பட்டு அவர்களால் முனமொழியப்பட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான ஆதரவையும் பெறுவார்கள்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கும், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு மற்ற நாடுகளுடன் ஒத்துழைத்து சவூதி அரேபியா நீண்ட காலமாக பங்காற்றி வருகிறது.

பாரிஸ் உடன்படிக்கை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டிற்கு இணங்கஇ, கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கும் அகற்றுவதற்கும் அதன் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த சுற்று கார்பன் பொருளாதார கட்டமைப்பை சவூதி அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த சவாலானது செப்டம்பர் 12, 2024 அன்று நிறைவடைகிறது, மேலும் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் திட்டங்களை, யோசனைகளை சமர்ப்பிக்க கீழுள்ள இணையத்தை நாடலாம்: https://uplink.weforum.org/uplink/s/uplink-issue/a00TE0000080E1a/carbon-capture-and-utilization-challenge?activeTab];uPChallenge-Overview

## அமானாவுக்கு பங்குதாரர்களின் அனுமதி

அமானா வங்கியின் ஏற்கனவே காணப்படும் ஒவ்வொரு 10 சாதாரண வாக்குரிமை பங்குகளும், தலா 1 சாதாரண வாக்குரிமை பங்காக ஒருங்கிணைப்பதற்கு பங்குதாரர்களின் அனுமதி கிடைத்துள்ளதாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு அமானா வங்கி அறிவித்துள்ளது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட அதிவிசேட பொது ஒன்றுகூடலின் போது இதற்கான விசேட தீர்மானம் ஏகமனதாக எய்தப்பட்டது.

ஒருங்கிணைப்புக்கான



அனுமதி தொடர்பில் அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பரலி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஒருங்கிணைப்புக்கான அனுமதியை வழங்கியமைக்காக எமது பங்குதாரர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.

இந்த நகர்வினூடாக பங்கு விலை தளம்பல்களை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன்இ இதர வங்கிகளுடன் ஒப்பீட்டை மேம்படுத்துவதாக அமைந்திருக்கும். மேலும் மேம்படுத்தப்பட்ட முதலீட்டாளர் விகிதங்களை காண்பிப்பதுடன், சந்தையில் அமானா வங்கியின் பங்குகளை மிகவும் கவர்ச்சிகரமானதாக அமைந்திருக்கச் செய்யும்." என்றார்.

## உயர் கல்வியில் நிகரற்ற சலுகைகளை வழங்கி முன்னிலையில் திகழும் SLIIT



சிறந்த உயர்கல்வி நிறுவனத்தைத் தெரிவுசெய்வது என்பது மாணவரின் எதிர்கால அபிலாஷைகளைத் தீர்மானிப்பதில் முக்கியமான முடிவாகும்.

சிறந்த உயர் கல்விப் பங்காளர் என்ற தெரிவை வழங்குவதன் ஊடாக இலங்கையின் கல்வியியல் ரீதியில் புதிய கண்டுபிடிப்புக்களை வழங்குவதிலும், சிறந்ததொரு கலங்கரை விளக்கமாகவும் SLIIT முன்னணியில் திகழ்கின்றது.

இலங்கையின் கல்வித் துறையில் சிறந்து விளங்குபவர் என்ற பாரம்பரியத்தை ஏற்படுத்தியுள்ள ளுடுஐஐவு 25 வருடத்துக்கும் அதிகமான கால அனுபவத்தைக் கொண்டுள்ளது.

SLIIT நிறுவனம் 1999ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது முதல் கால் நூற்றாண்டு காலமாக நிபுணத்துவம் மற்றும் திறமைகளை வளர்ப்பதில் நிரூபிக்கப்பட்ட சாதனைகளைக் கொண்டுள்ளது.

கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு தனியார் கல்வித் துறையில் சிறப்புக்கான அடையாளமாக விளங்குகின்றது.

# வலு மற்றும் மின் கண்காட்சிக்கு அனுசரணை




ஒன்பதாவது நிர்மாண வலு மற்றும் மின் கண்காட்சி 2024, E. B. Creasy Solar இன் பிளாட்டினம் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டது.

ஜுலை 5 முதல் 7 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிலைபேறாண்மை அபிவிருத்திக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்புக்காக அறியப்படும் E. B. Creasy Solar, E.B. Creasy & Co. PLC இன் புதுப்பிக்கத்தக்க வலு பிரிவின் அங்கமாக அமைந்துள்ளது.

தூயஇ நிலைபேறான வலுத் தீர்வுகளை இல்லங்கள் மற்றும் தொழிற்துறைகளுக்கு வழங்கும் வகையில் நவீன Solar Grid Tied, Solar Irrigation மற்றும் Solar u;ybrid தீர்வுகள் போன்றவற்றை இந்நிகழ்வில் காட்சிப்படுத்தியிருந்தது.

பிளாட்டினம் அனுசரணையாளர் எனும் வகையில், புத்தாக்கம் மற்றும் நிலைபேறாண்மையை இலங்கையின் வலுத்துறையில் கட்டியெழுப்புவதற்கான தனது அர்ப்பணிப்பை E. B. Creasy Solar மீள உறுதி செய்திருந்தது.

# உலக சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடிய Coca-Cola




உலக சுற்றுச்சூழல் தினமான ஜுன் 5, 2024 அன்று Coca-Cola அறக்கட்டளை மற்றும் World Vision Lanka நிறுவனம் ஆகியவைஇ கொழும்பில் உள்ள உலக வர்த்தக மையத்தில் மூன்று புதிய Drop-in பிளாஸ்டிக் சேகரிப்பு வசதிகளை நிறுவின. ASPIRE திட்டத்தின் கீழ்இ இந்த நிகழ்வில் உலக வர்த்தக மையத்தின் முன்னால் திறப்பு விழாவும், PET பிளாஸ்டிக் போத்தல்களை தனியாக பிரித்தெடுத்து மீள்சுழற்சி செய்வதின் அவசியம் குறித்து சேகரிப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு அறிவை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட தகவல் விழிப்புணர்வு அமர்வுகளும் இடம்பெற்றன.

மேலும், வீட்டில் இருந்து PET பிளாஸ்டிக் போத்தல்களை கொண்டு வருமாறு அனைவரையும் ஊக்குவித்தன. இந்த ஒத்துழைப்பு, உலக வர்த்தக மையத்தில் சேகரிக்கப்படும் அனைத்து PET கழிவுகளும் முறையாக தனியே பிரிக்கப்பட்டு மீள்சுழற்சி செய்யப்படுவதை உறுதி செய்கிறது.

உலக வர்த்தக மையத்தில் மூலோபாய முறையில் அமைக்கப்பட்டுள்ள 30 சேகரிப்பு நிலையங்கள் மூலம் PET சேகரிப்பை அதிகரிப்பதே ASPIRE திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த முயற்சி சமூகங்களை ஊக்குவிப்பதோடுஇ நிலையான கழிவு நிர்வகிப்பதையும் மேம்படுத்திஇ திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்குகளை அடைய உதவுகிறது.

# சூரிய மின்னுற்பத்தித் திட்டம்



இலங்கையின் மிகப் பாரிய துரித பரிமாறல் உணவகச் சங்கிலியான பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் பிரைவேட் லிமிடெட் (P&S), பஸ்யாலையிலுள்ள தனது உற்பத்திப் பிரிவில் 125மறு கூரை சூரிய மின்னுற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைத்து, தூய்மையான எரிசக்தியை நோக்கிய பாரியதொரு அடியை எடுத்து வைத்துள்ளது.

நிலைபேண்தகு தொழிற்பாடுகள் மற்றும் சூழல் மீதான பொறுப்புணர்வு ஆகியவற்றின் மீது நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்பில் இச்செயற்திட்டம் ஒரு பாரிய சாதனை இலக்காக மாறியுள்ளது.

Vislam Energy Lanka (Pvt) Ltd மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மே மாதத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இந்த 125kWp கூரை சூரிய மின்னுற்பத்தித் திட்டமானது ஆண்டுதோறும் 181,500kW தூய்மையான எரிசக்தியை உற்பத்தி செய்யவுள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் 127,050Kg CO2 உமிழ்வை கணிசமாகக் குறைக்கிறது.

# தங்க விருதை வென்ற யூனிலீவர்



நிலைபேறான வர்த்தக நடைமுறைகளில் பின்பற்றுவதில் புகழ்பெற்ற முன்னணி நிறுவனமான யூனிலீவர் ஸ்ரீலங்கா, நிலைபேறான தொழில்துறை மேம்பாட்டுக்கான பசுமைத் தொழில்துறை முன்முயற்சியின் (ISGSD 2024) ஆரம்ப சர்வதேச கருத்தரங்கில், உற்பத்திப் பயன்பாடுகளுக்கான தூய்மையான வலுசக்திப் பிரிவில் உயரிய தங்க விருதைப் பெற்றுள்ளது.

இந்த மதிப்புமிக்க அங்கீகாரமானது, சூழலுக்கும் அதனுடன் தொடர்புடைய சமூகங்களுக்கும், சிறந்த சாதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, புத்தாக்கமான, தூய்மையான வலுசக்தி தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதில் யூனிலீவர் ஸ்ரீ லங்கா கொண்டுள்ள அற்புதமான சாதனைகளுக்கான கௌரவமாகும்.

யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் உலகளாவிய நிலைபேறானதன்மை மூலோபாய நடைமுறையில், காலநிலைக்கு சாதகமான நடவடிக்கைகளானது ஒரு அடிப்படைக் கோட்பாடாக விளங்குகின்றது.

# DFCC வங்கியின் பொசன் பக்தி கீதம் மற்றும் அன்னதான நிகழ்வுகள்





DFCC வங்கி, கொழும்பிலும், கண்டியிலும் பக்தி கீதம் மற்றும் அன்னதான நிகழ்வுகளுடன் பொசன் பௌர்ணமி தினத்தை அண்மையில் அனுட்டித்துள்ளது. கொழும்பில் அதன் நிகழ்வானது 2024 ஜுன் 20 அன்று DFCC வங்கி பொரளை கிளையில் இடம்பெற்றதுடன், கண்டியில் அதன் நிகழ்வானது 2024 ஜுன் 21 (பொசன் பௌர்ணமி தினம்) அன்று ஸ்ரீ தலதா மாளிகையின் பிரதான மண்டபத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

டிஜிட்டல் இடமளிப்பில் வங்கி கவனம் செலுத்தியுள்ளமைக்கு அமைவாக, இந்நிகழ்வுகள் DFCC வங்கியின் முகநூல் மற்றும் யூடியூப் அலைவரிசை ஆகியவற்றினூடாக நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்த இரு நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டதுடன், வங்கியின் அணிகள் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்திருந்தனர்.

# பொருள் மீட்பு வசதிகள் நிறுவல்

நிலைத்தன்மைக்கான அவர்களின் அர்ப்பணிப்பை வலுப்படுத்தும் வகையில், Coca-Cola Foundation (TCCF), Eco-Spindles மற்றும் Janathakshan (GTE) ஆகியவை இலங்கையில் இரண்டு அதிநவீன பொருள் மீட்பு வசதிகளை (MRFs) பெருமையுடன் திறந்து வைத்தன. யாழ்ப்பாணத்தில் 'Golden PET Company Pvt Ltd' என்றும், பதுளையில; 'J.A.S. Fernando' என்றும் பெயரிடப்பட்ட இந்த வசதிகள், உள்ளூர் பிளாஸ்டிக் கழிவு சவால்களை எதிர்கொள்வதிலும், பிராந்தியங்களில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் குறிக்கின்றன.

பிளாஸ்டிக் மாசுபாடுகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான Global Movement Advocating நிறுவனத்தினால், இலங்கையில் இந்த பொருள் மீட்பு வசதி நிலையங்கள் அறிமுகப்படுத்துவது, உள்ளூர் பிளாஸ்டிக் கழிவு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இந்த நிலையங்கள் மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் கழிவுகள் பதப்படுத்தும் முறைகளால் பொருத்தப்பட்டு இருப்பதால், இலங்கையில் நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறைகளை மறுவரையறை செய்து, மாதம் 20 மெட்ரிக் தொன் கழிவுகளை பதப்படுத்தும் திறன் கொண்டவை.



# செலான் டிக்கிரி UCMAS இணைவு




நாட்டின் முன்னணி சிறுவர் சேமிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றான செலான் டிக்கிரிஇ சிறுவர்களின் கணிதத் திறன்களை மேம்படுத்துவதற்காக அபாகஸ் அடிப்படையிலான கற்றல் முறையான ருளைநசளயட ஊழஉெநிவ ஆநவெயட யுசவைாஅநவளை ளுலளவநஅ (ருஊஆயுளு) உடன் சமீபத்தில் கைகோர்த்தது.

பொதுவாக சிறுவர்கள் சலிப்பாகவோ அல்லது புரிந்துகொள்ள கடினமாகவோ கருதும் பாடமான கணிதத்தை கற்றல் செயன்முறையை சுவாரஸ்யமாக்குவதன் மூலம் சிறுவர்கள் அதனை சிறப்பாகவும் எளிதாகவும் கற்க உதவுவதே செலான் டிக்கிரியின் இம்முயற்சியின் நோக்கம் ஆகும். இது 4 தொடக்கம் 13 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இணைவுஇ 2024 ஜுன் 25 அன்று செலான் வங்கியின் தலைமையகத்தில் அண்மைய பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகையுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில்இ தற்போதைய ருஊஆயுளு மாணவர்களின் திறன்கள் நேரடியாக காட்சிப்படுத்தப்பட்டதோடு கணிதத்தை புரிந்துகொள்ள கஷ்டப்படும் மாணவர்களின் வாழ்க்கையை எளிதாக்கும் கல்வி முயற்சிகளுக்கு நிதி மற்றும் ஆதரவு அளிப்பதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது.

சிறுவர்கள் தங்கள் கல்வி ஊடாக சிறந்த பலனைப் பெறுவதற்கு அதனை மகிழ்ச்சியுடன் கற்பது அடிப்படையானது என்பதை நினைவூட்டுவதாகவும் இந்நிகழ்வு அமைந்தது.

# TikTokஇன் சமூக வழிகாட்டல் அமலாக்கல் அறிக்கை வெளியீடு

TikTok தனது சர்வதேச பயனாளர்களுக்கு பாதுகாப்பான சூழல் ஒன்றை உருவாக்கும் நோக்கில் புதிய தரவுப் புள்ளிகள் மற்றும் பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டு 2024 முதல் காலாண்டுக்கான சமூக வழிகாட்டல் அமலாக்கல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், வுமைவழம நிறுவனம் உலகளவில் 166,997,307 வீடியோக்களை அகற்றியது, இது பதவேற்றிய அனைத்து வீடியோக்களில் 0.9மூ ஆகும். இவற்றில் கணிசமான பகுதி, 129,335,793 வீடியோக்கள், தன்னியக்க கண்டறிதல் தொழில்நுட்பங்கள் மூலம் அடையாளம் காணப்பட்டு அகற்றப்பட்டன.

அதே நேரத்தில், 6,042,287 வீடியோக்கள் மறுபரிசீலனை செய்யப்பட்ட பிறகு மீண்டும் பதிவேற்றப்பட்டன.

இது தவிர, TikTok தனது சமூக வழிகாட்டுதல்களை மீறியதற்காக முதல் காலாண்டில் 976,479,946 வீடியோ கருத்துகளை (Comments) நீக்கியது. இது குறித்த காலப்பகுதியில் வெளியிடப்பட்ட மொத்த வீடியோ கருத்துகளில் 1.6% ஆகும். அத்துடன், அந்தக் காலப்பகுதியில் வீடியோ கிரியேட்டர்கள் விரிவான கருத்துப் பாதுகாப்பு கருவிகளைப் பயன்படுத்தி 3,381,646,722 கருத்துக்களை அவர்களின் வீடியோக்களில் இருந்து நீக்கினார்கள்.

# DIMOவிற்கு சுற்றாடல் பாதுகாப்பிற்கான விருது



அண்மையில் BMIC இல் நடைபெற்ற 2024 ஜனாதிபதி சுற்றாடல் விருது விழாவில், வாகன சேவை மையப் பிரிவின் கீழ் DIMO வெண்கல விருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி சுற்றாடல் விருது விழாவில் DIMO இந்த விருதைப் பெறுவது இது இரண்டாவது வருடமாகும். இந்த விருது வழங்கும் விழாவில் வாகன சேவை மைய பிரிவுக்கு உயரிய விருதாக வெண்கல விருதே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த பெறுமதி வாய்ந்த விருது வழங்கும் விழாவில், Mercedes-Benz வாகனங்களுக்கான சேவை வழங்கும் சேவை மையமான DIMO 800, சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் அது கொண்டுள்ள சிறந்த அர்ப்பணிப்புக்காக இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.



# நடமாடும் பல் மருத்துவ சிகிச்சை

தேசத்தின் மிகவும் நம்பகமான வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றான, uemas Consumer Brands நிறுவனத்தின் க்ளோகார்ட, சுகாதார மருத்துவ அதிகாரிகளுடன் (MOu;) இணைந்து, பற் சூத்தைகள் அற்ற தேசத்தை உருவாக்குவதற்கான அதன் தொடர்ச்சியான திட்டமான, பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டலை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் 10 வருடங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இலங்கை முழுவதிலும் உள்ள சிறுவர்களுக்கு சிறந்த வாய்ச் சுகாதார பராமரிப்புக்கான வாய்ப்பினை வழங்குகின்றது. அவர்கள் அனைவரும் ஆரோக்கியமான புன்னகையை கொண்டிருப்பதற்கான வாய்ப்பை வழங்குவதில் க்ளோகார்ட் கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாகும்.

ஆமுர் மருத்துவர்களால் நடத்தப்படும், சிறந்த வாய்ச் சுகாதார நடைமுறைகள் தொடர்பான வலுவான அறிவூட்டல் நிகழ்வுகளை இந்த திட்டம் கொண்டுள்ளது.

வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமான பழக்கங்களை குழந்தைகளிடம் ஏற்படுத்துவதற்கு, அறிவூட்டல் செயற்பாடு மிகவும் முக்கியமானதாகும்.

# INSEE Ecocycle இற்கு தங்க விருது



இலங்கையில் நிலைபேணத்தக்க கழிவு முகாமைத்துவத்தில் முன்னோடியான INSEE Ecocycle ஆனது Green Industry Awards 2024 விருதுகள் நிகழ்வில் மதிப்பிற்குரிய தங்க விருதை வென்று பெருமையடைந்துள்ளது.

நிலைபேணத்தக்க கைத்தொழில் அபிவிருத்திக்கான பசுமை கைத்தொழில் முயற்சிகள் தொடர்பான 1வது சர்வதேச கண்காட்சி நிகழ்வின் போது கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் இது வழங்கப்பட்டுள்ளது.

Sound Chemical Management பிரிவில் நிலைபேணத்தக்க கைத்தொழில் நடைமுறைகளுக்கு INSEE Ecocycle ஆற்றியுள்ள புத்தாக்கத்துடனான பங்களிப்புக்களுக்கான இவ்விருது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது ஜுன் 23ஆம் திகதியன்று BMICù இல் இடம்பெற்றது.

கைத்தொழில் கழிவு சார்ந்த சவால்கள் தொடர்பில் ஓயாத அர்ப்பணிப்புடன், முன்னோடித் தீர்வுகளை வழங்குவதற்காக கைத்தொழில் அபிவிருத்திச்சபையானது INSEE Ecocycle க்கு அங்கீகாரமளித்துள்ளது.

# இலங்கையின் புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கான சாத்தியத்தை சுட்டிக்காட்டும் அதானி




அண்மையில் அதானி குழுமத்தின் உலகளாவிய நிறுவனத் தலைமையகத்தில் இலங்கை ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது, Adani Green Energy இன் ஸ்ரீ லங்கா திட்டத்திற்கு தலைமை தாங்கும் Adani Power Ltd மற்றும் Adani Energy Solutions Ltd முகாமைத்துவப் பணிப்பாளர் அனில் சர்தானா, இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பான முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். வருடம் முழுவதும் சூரிய ஒளி, காற்று, நீர் வலு ஆகியவற்றைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக பசுமை வலுசக்தியை பெற முடிவதற்காக இலங்கை கொண்டுள்ள திறனை சர்தானா இங்கு சுட்டிக்காட்டினார்.

சூரிய சக்தி, காற்று வலுசக்தி, நீர் சக்தி ஆகியவற்றின் மூலம் போட்டித் தன்மை மிக்க பசுமை வலுசக்தியை உற்பத்தி செய்வதற்கான வளங்களை இலங்கை பரந்த அளவில் கொண்டுள்ளது.

அத்துடன் பசுமை ஐதரஜன் மற்றும் பசுமை அமோனியா போன்ற துணை உற்பத்தி மூலங்களை உருவாக்கி ஏற்றுமதி செய்வதிலும் நாடு கவனம் செலுத்த வேண்டும் எனஇ சர்தானா இங்கு தெரிவித்தார். இது மேலதிக வருமானத்தை உருவாக்குவதன் மூலமும் பகிரப்படும் வருமானத்தின் மூலமும் மக்களுக்கு பயனை வழங்க முடியும்.

இலங்கையில் மன்னார் மற்றும் பூநகரி பகுதியில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க அதானி நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன் மூலம், ஒரு பில்லியன் டொலர்களுக்கும் அதிக முதலீட்டைக் கொண்ட மொத்தமாக 484 ஆறு திறன் கொண்ட மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

# PLC Al-Safa

## நாடளாவிய ரீதியில் விஸ்தரிப்பு



இலங்கையில் முதலாவது, வங்கி அல்லாத, முழுமையான சேவைகளை வழங்கும் இஸ்லாமிய நிதி வழங்குனர் என்ற சிறப்பைக் கொண்ட பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சி Al-Safa பிரிவு 2005 ஆம் ஆண்டு முதல் நம்பகமான மற்றும் விசுவாசமான ஷரியா-இணக்கப்பாட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கி வருகின்றது.

கடந்த இரு தசாப்தங்களாக, உயர் தரமான மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சேவைகளை வழங்குவதில் அது நன்மதிப்பைக் கட்டியெழுப்பியுள்ளது.

முழுமையாக ஷரியா-இணக்கப்பாடு கொண்ட, மாற்று நிதியியல் தீர்வுகளை நாடுகின்ற இலங்கை மக்களுக்கு Al-Safa சேவைகளை வழங்கி வருகின்றது.

செயற்பட ஆரம்பித்தது முதல் PLC Al-Safa ஆனது ஷரியா-இணக்கப்பாட்டு நிதிக் கட்டமைப்பினுள் புத்தாக்கத்தின் மீது அர்ப்பணிப்புடன் இயங்கி வருகின்றது.

ஷரியா மேற்பார்வை சபையை வலுப்படுத்தி இணக்கப்பாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மீதான தனது அர்ப்பணிப்பை இந்நிறுவனம் மேம்படுத்தியுள்ளது. தனது வழங்கல்கள், சேவைகள் மற்றும் நடைமுறைகளை கிரமமான அடிப்படையில் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து, அவை ஷரியா கோட்பாடுகளுக்கு இணங்குகின்றன என்பதை உறுதி செய்வது மட்டுமன்றி, அதிகபட்ச மதிப்பு, நெகிழ்வுத்தன்மை மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றையும் வழங்குகின்றன என்பதை உறுதி செய்வதற்கு இது PLC Al-Safa க்கு இடமளிக்கின்றது.



# Prime Groupஇன் காலி கிளை இடமாற்றம்

Prime Group தனது காலி கிளையை, இல. 66, ஹவ்லொக் வீதி, காலி எனும் முகவரிக்கு இடம் மாற்றியுள்ளது. அதனூடாக, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் கிளையை கொண்டுள்ளதுடன், தொழினுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்ட இடவசதியையும் கொண்டுள்ளது.

Prime Groupஇன் பயணத்தில் இந்த நகர்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல் கல்லாக அமைந்திருப்பதுடன், பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சௌகரியம், நவீன உட்கட்டமைப்பு மற்றும் சிறந்த சேவையை பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.

புதிய கிளையின் உட்கட்டமைப்பு மற்றும் செயன்முறைகள் போன்றன மேம்படுத்தப்பட்டு, உயர் தரம் வாய்ந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் ஒப்பற்ற அனுகல் திறன் போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதாக அமைந்திருப்பதுடன், Prime Groupஇன் பெருமைக்குரிய வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்திய அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

உள்ளக நிபுணத்துவத்தைக் கொண்டு, Prime Group இனால் பல முக்கியத்துவம் வாய்ந்த மேம்படுத்தல்கள் புதிய பகுதியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதில் கொடுப்பனவு மற்றும் கொள்முதல் மாதிரிகளில் கவனம் செலுத்தப்படும்.

# 500 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள்



மூன்றாம் நிலை சுகாதார சேவையில் இலங்கையின் முன்னணியிலுள்ள நவலோக்க மருத்துவமனை குழுமம்இ 500 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக முடித்துள்ளதாக அண்மையில் அறிவித்தது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையில்இ ஒரு நபரின் உயிரைக் காப்பாற்ற ஒரு தனித்துவமான அறுவை சிகிச்சையாக இதனைக் கூறலாம்.

உயிருடன் அல்லது இறந்த நபரிடமிருந்து தானமாக பெறப்பட்ட ஆரோக்கியமான சிறுநீரகம்இ சிறுநீரகங்கள் சரியாக செயல்படாத ஒரு நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தப்படுகிறது.

சிறுநீரகம் செயலிழந்த நோயாளிகளுக்கு ஆரோக்கியமான சிறுநீரகத்தை மாற்றுவதற்காக அதிநவீன மருத்துவ உபகரணங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் நவலோக்க மருத்துவமனை அதன் மூலம் 500 சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து முடித்தமை இலங்கையின் சுகாதார வரலாற்றில் பெரும் சாதனையாக குறிப்பிடலாம்.



# ஆடம்பர பாங்கொக் சுற்றுலா

சர்வோதய டெவலெப்மென்ட் பினான்ஸ் பிஎல்சிஇ தனது பணியாளர்கள் மத்தியில் மிகச் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்றவர்களுக்கு உத்வேகமளித்துஇ அங்கீகாரம் வழங்கிஇ வெகுமதியளிக்கும் நோக்குடன்இ நிறுவனத்தினுள் முன்னெடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகஇ தனது வெளிநாட்டுச் சுற்றுலாப் போட்டியை அண்மையில் நடாத்தியுள்ளது.

தத்தமது பணிப்பொறுப்புக்களுக்கு அமைவாகஇ குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் இப்போட்டிக்கான மதிப்பீடு இடம்பெற்றது.

அந்த வகையில்இ வியாபார மேம்பாட்டு அலுவலர்கள்இ கிளை முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய முகாமையாளர்கள் ஆகியோர் கடந்த 12 மாதங்களுக்கான வணிக அளவுஇ வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் பண வசூல் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டனர். இதற்கிடையில் கடன் அறவீட்டு அணியானது அவர்களுடைய பண வசூல் விகிதங்கள் மற்றும் செயல்படா கடன்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் ஆகிய அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன்இ தங்கக் கடன் அலுவலர்கள் இந்த ஆண்டிற்கான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டனர்.

56 கிளைகளைச் சேர்ந்தவர்கள் மத்தியிலிருந்து 2023ஃ24 நிதியாண்டில் உச்ச பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்களாக 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மிகச் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்கள் பெரும்பாலாக வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது .